
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1218

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

66

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

ரகுமான்கானின் சட்டமன்ற உரைகள், ஒரு தி.மு.க. உறுப்பினர் என்ற நிலையில் அ.தி.மு.க.வைத் தாக்கிப் பேசுவது அல்லது அவர்களை கண்ணியக் குறைவாக விமர்சிப்பது என்பதாக அல்லாமல், ஆக்கபூர்வமான உரைகளாகவே அமைந்திருந்தன. பலதரப்பட்ட மக்கள் பிரச்சினைகளைத் தர்க்கபூர்வமாகப் பேசி, தனது நிலைப்பாட்டையும் கழக நிலைப்பாட்டையும் உறுதியோடு எடுத்துரைத்தவர் ரகுமான்கான். அதே சமயம், எம்.ஜி.ஆர். ஆட்சிக்கால பழிவாங்கல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, ஆணித்தரமான வாதங்களையும் முன்வைத்தவர். அதில் சில பிரச்சினைகளை மட்டும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

1984-ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு 1984 குறித்த விவாதம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடைபெற்றது. ‘இந்தப் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவினுடைய நிதியுதவியைப் பெறுகிற வகையில், இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவந்திருக்கிறோம்’ என்று அன்றைய கல்வி அமைச்சர் அரங்கநாயகம் குறிப்பிட்டார்.


இதுதொடர்பான விவாதத்தில் பேசிய ரகுமான்கான், “பல்கலைக்கழக நிர்வாகம், கல்வித்தரம் எப்படி இருக்க வேண்டும் என்று பொதுவாகத் திட்டமிட்டுச் சொல்வதற்கு, ‘பிளானிங் போர்டு திட்டக்குழு’ போட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் சார்ந்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்கிறேன். ஆனால், பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்புகளாக இருப்பவை ஆலோசனைக் குழு - செனட், ஆட்சிக்கு - சிண்டிகேட், கல்வி விவகாரங்கள் குறித்த நிலைக்குழு - ஸ்டாண்டிங் கமிட்டி ஆன் அகாடமிக் அஃபேர்ஸ் - என்று மூன்று குழுக்கள் இருக்கின்றன. அந்த மூன்று குழுக்களில் ஏதேனும் ஒரு குழுவிலே ஆறு ஆண்டுக் காலம் ஒருவர் பதவி வகித்து இருந்தால், அவர் மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வந்தாலும் அல்லது நியமனம் செய்யப்பட்டு வந்தாலும், அது செல்லாது என்று ஒரு ஷரத்தை இப்போது இதிலே இணைத்திருக்கிறீர்கள்.

## பல்கலைக்கழக விவகாரம்

அதுமட்டுமல்லாமல், இது இந்த ஒரு பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகத்திற்கும் பொருந்தும் என்ற குறிப்பையும் இதிலே இணைத்திருக்கிறீர்கள். இந்தக் கருத்து இந்த அரசாங்கத்தின் ஆலோசனை என்று நான் கருதுகிறேன். காரணம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் சிண்டிகேட் உறுப்பினராக இருப்பதால், அவருடைய பதவியைப் பறிக்க வேண்டும் என்ற அரசியல் உள்நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள் என்று நான் அன்றைக்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், இது என்ன பல்கலைக்கழகத் திருத்த மசோதாவா அல்லது பழனிவேல்ராஜன் பதவி பறிப்பு மசோதாவா என்றுகூட நான் பேசியதாக நினைவு. ஆனால், இப்போது அதே காரணத்தைச் சொல்லி மற்ற பல்கலைக்கழகங்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவருகிறார்கள்” என்று அ.தி.மு.க. அரசின் உள்நோக்கத்தை உடைத்து அம்பலப்படுத்தினார் ரகுமான்கான்.

1979-ஆம் ஆண்டு, மாநிலக் கல்லூரியின் ‘விக்டோரியா விடுதி’யில் தாக்குதல் ஒன்று நடைபெற்றிருந்தது. மாணவர்கள்மீது காவல் துறையுடன் இணைந்து சிலர் தாக்குதல் நடத்தியிருந்தனர். விடுதிக்கு அருகே இருந்த வேதியியல் ஆய்வகத்திற்குள் நுழைந்து பொருட்களைச் சேதப்படுத்தியிருந்தனர். மேஜை, நாற்காலிகள் உடைக்கப்பட்டன. 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உணவுக்காகக் கூட வெளியே செல்ல முடியாமல் உள்ளே தவித்துக்கொண்டிருந்தனர். பல மாணவர்கள் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் குறித்து அப்போது சிறப்பு விவாதம் நடத்தக்கோரி ஒத்திவைப்புத் தீர்மானத்தை தி.மு.கழகம் அளித்திருந்தது. அந்த விவாதத்தின்மீது, துரைமுருகன் மட்டும் பேசுவார் என ஆய்வுக் குழுவில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், ரகுமான்கானும் தனியாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தார். எனினும், துரைமுருகனை மட்டும் பேச சபாநாயகர் அனுமதித்தார். அப்படியானால் ரகுமான்கான் பேசட்டும், நான் பேசவில்லை என எழுந்து கூறினார் துரைமுருகன். அதனடிப்படையில், அன்று ரகுமான்கானே இவ்விவகாரம் தொடர்பாகப் பேசி, மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அதற்குக் காரணமானவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

அதேபோல 1984-ஆம் ஆண்டு, உதகையில் படப்பிடிப்பின்போது கன்னட நடிகர் ராஜ்குமாரும், அவரின் மகன் புனித் ராஜ்குமாரும் சிலரால் தாக்கப்பட்டதாகச் செய்திகள் வந்தன. இந்தச் செய்தியால் கர்நாடகாவில் தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. இரு மொழி பேசும் மக்களுக்கு இடையிலான மோதலாக இச்சம்பவம் மாறியது. ராஜ்குமார் ரசிகர் மன்றத்தினர் பெங்களூருவில் எம்.ஜி.ஆர். உருவ பொம்மையை எரித்தனர். நகரெங்கும் கலவரச்சூழல் உருவானது. தமிழ்நாட்டு வாகனங்கள் அடித்து உடைக்கப்பட்டன. தீ வைத்து எரிக்கப்பட்டன. மொத்தம் 500 வாகனங்களுக்கு மேல் சேதப்படுத்தப்பட்டன. அங்கமுத்து என்ற தமிழ் மாணவர் கத்திக் குத்துக்கு ஆளானார். ஓசூரில், இரு மாநில எல்லையிலேயே வாகனங்கள் நிறுத்தப்பட்டன. தமிழ்த் திரைப்படங்கள் கர்நாடகாவில் வெளியிடப்படவில்லை. சித்ரதுர்கா, மாண்டியா, சிவமோகா மாவட்டங்களில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. நான்கு நாட்களில் 64 பேர் காயமடைந்தனர். ‘ஜனதா தளத்தைச் சேர்ந்த வர்கள்தான் தாக்கினார்கள்’ என ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மா குற்றம் சாட்டினார்.




# தமிழர்களின் சார்பாக ஒலித்த குரல்!

கர்நாடகாவில் தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில், இச்சம்பவம் குறித்து விவாதிக்க மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ரகுமான்கான் சட்டமன்றத்திலே வலியுறுத்தினார். “ஏழரைக் கோடி தமிழர்களின் சார்பாக இந்தத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்” என்று தாக்கப்பட்டவர்களின் விவரங்களையும், தாக்கியவர்கள் யார் என்பதையும் கூறினார் ரகுமான்கான். ஆனால், அவர் குறிப்பிட்ட பெயர்கள் எல்லாம் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன. அதேபோல் 1984-இல் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீவிரமடைந்திருந்த சூழலில், டெல்லிக்குச் சென்ற எம்.ஜி.ஆர்., பிரதமரைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசியிருந்தார். ஆனால், என்ன பேசப்பட்டது என்பது குறித்து ஒற்றை வரி அறிக்கைகூட வெளியாகவில்லை. ‘பிரதமருடன் என்ன பேசப்பட்டது, என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவியுங்கள்’ என வலியுறுத்தினார் ரகுமான்கான்.

> “மாணவர் நலன், தொழிலாளர் நலன், தமிழர் நலன், இலங்கைத் தமிழர் நலன் எனப் பலதரப்பட்டோரின் குரலாகக் தி.மு.க.வின் முகமாக இருந்து ஒலித்தவர் ரகுமான்கான்.”

இப்படியாக மாணவர் நலன், தொழிலாளர் நலன், தமிழர் நலன், இலங்கைத் தமிழர் நலன் எனப் பலதரப்பட்டோரின் குரலாகக் தி.மு.க.வின் முகமாக இருந்து ஒலித்தவர் ரகுமான்கான். அதனால்தான், இடிமுழக்கமாக அவரை இதயத்தில் ஏந்தியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

...நீளும்

## தேசிய தேர்வு முகமையின் தோல்வி!

நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து, ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல, CUET-UG 2026 தேர்வின்போது பல மையங்களில் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டன. சில மாணவர்களால் தேர்வை எழுத முடியவில்லை. சில மையங்களில் தாமதங்கள் ஏற்பட்டன. இவை ஒருபுறம் இருக்க, தேசிய தேர்வு முகமையின் மறுதேர்வு இணையதளத்தில் பாதுகாப்பு பலவீனங்கள் இருப்பதாக சைபர் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். நிர்வாக மற்றும் பயனர் தகவல்கள் கசிந்திருக்கலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது. இதனால், தேசிய தேர்வு முகமை மீதான நம்பிக்கை ஒட்டுமொத்தமாகச் சிதைந்துபோயுள்ளது.

இந்நிலையில், தேசிய தேர்வு முகமை அமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள பிரதீப்குமார் ஜோஷி மீது முக்கியமான விமர்சனங்களை ‘தி வயர்’ ஊடகம் வைத்துள்ளது. ‘தேசிய தேர்வு முகமை, தனது தேர்வுகளில் தோல்வியடைந்துள்ளது’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ள பத்திரிகையாளர் சிருஷ்டி ஜஸ்வால், “உத்தரகாண்ட்டைச் சேர்ந்த பேராசிரியரான இவர், பா.ஜ.க. மூத்த தலைவர்களான முரளி மனோகர் ஜோஷி, அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு நெருக்கமானவராக அறியப்பட்டவர். 2006 - 2011 ஆம் ஆண்டுகள் வரை மத்தியப் பிரதேச அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (எம்.பி.பி.எஸ்.சி.) தலைவராகப் பணியாற்றினார். பின்னர், சத்தீஸ்கர் அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கும் தலைமை தாங்கினார். அவரது பதவிக்காலம், ‘வியாபம் ஊழல்’ வெளிவந்த காலத்துடன் பொருந்திப்போகிறது.

2006-இல் ஜோஷி எம்.பி.பி.எஸ்.சி. தலைவராக நியமிக்கப்பட்டது, ‘ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்க’த்தின் பரிந்துரையின் பேரில் நிகழ்ந்தது. மேலும், 2009-ஆம் ஆண்டில், அதன் தலைவராக இருந்தபோது, மாநில அரசின் உயர் கல்வித் துறையில் முதல் வகுப்பு அரசிதழ் பதிவுபெற்ற பேராசிரியர்களை நேரடியாக ஆள்சேர்ப்பு செய்வதில் முறைகேடுகள் வெளிவந்தன. இந்த விஷயம் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தைக்கூட எட்டியது” என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய நபரை, தேசிய தேர்வு முகமையின் தலைமைப் பொறுப்பில் ஒன்றிய அரசு அமர்த்தியது ஏன்? என்ற கேள்வி வலுத்திருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்


கி.முகுந்தன்



### பெரம்பலூரில் பெரியார் சிலை!

1981-ஆம் ஆண்டு, பெரம்பலூரில் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பாக, தந்தை பெரியாரின் திருவுருவச் சிலையை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தலைமையில், திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் அய்யா அன்பில் தர்மலிங்கம் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். ஜே.எஸ்.இராசு எம்.எல்.ஏ, திருச்சி செல்வராஜ்.எம்.பி, அரியலூர் ஆறுமுகம் எம்.எல்.ஏ உள்பட பகுத்தறிவாளர் கழகத்தினர் ஏராளமானோர் கலந்துகொண்ட அந்த நிகழ்ச்சி, காலத்தால் மறக்கமுடியாது.

– கி.முகுந்தன்,
கழகப் பொதுக் குழு உறுப்பினர், பெரம்பலூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருகை

### தமிழில் வழிபாடு!

1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம், இராமநாதபுரத்தில் 40-க்கும் மேற்பட்ட மடாதிபதிகள் இணைந்து, ‘தமிழ்ச் சங்கம்’ சார்பில் மாநாடு நடத்தினர். அந்த மாநாட்டில் கலந்துகொண்ட அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் மு.கண்ணப்பனிடம் தமிழ் வழிபாட்டு முறையை நடைமுறைப்படுத்தக்கோரி மடாதிபதிகள் கோரிக்கை விடுத்தனர். ஆகஸ்ட் 15 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியளித்தார். அதன்படியே, ‘தமிழ் வழிபாட்டு முறை’ சிலரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நடைமுறைக்கு வந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900